முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1026

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.07.2022, வியாழக்கிழமை

1. ஓங்கார சூட்சுமமே அரங்கா வாழ்க
ஓங்கார மகா சக்தியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 05 நாள், 21.07.2022 வியாழக்கிழமை)
2. ஆசியதும் அரங்கனைக்கொண்டே உலகில்
அற்புதத்தை ஆறுமுகன் நடத்த உள்ளேன்
வாசி வென்ற மக்களை எல்லாம் சேர்த்து
வலம் வர செய்து அரங்கன் தர்மத்தை காத்து
3. காத்துமே உலகத்தின் பசி பிணி விரட்டி
கண்டுரைப்பேன் ஞான சூட்சுமமாக
அருளியே உத்தமமாய் அரங்கன் சீடர்படைகளாகி
உலகமெங்கும் ஞானப்படைகளை பெருக்கி
4. பெருக்கியே ஓங்கார ஞானத்தை
பேருலகம் அடைந்து சிறக்கும்படி
ஓங்காரக்குடில் கொண்டே உலகிற்கு மாற்றம் தருவேன்
உயர்வான இந்த அற்புதத்தை
5. அற்புதத்தை அரங்கனுக்கு நித்தம் நித்தம்
ஆற்றலாக ஆறுமுகன் வழங்கி வருகின்றேன்
ஏற்புகொண்டு அரங்கன் தொடர்பில்
இந்த இரகசியம் அறிந்து இணைந்தவரெல்லாம்
6. இணைந்த எல்லோரும் இனிதே
எல்லா வளமும் திடமும் கண்டு
துணிவு பட அரங்கனால்
தேற்றம் கண்டு உலகில் ஞானியாவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–